## ஓம் ஸ்ரீ சாயிராம்

## பிரசாந்தி சந்தேஷ்

## வினா விடை நேரம்

## வினா எண் 309

## தலைப்பு தெய்வீகத்தின் இயல்புகள்

*நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 18-23 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி*

கேள்வி:ஸ்வாமி கடவுளின் இரண்டு விதமான நிலைகள் அதாவது உருவம் உள்ள மற்றும் உருவம் இல்லாத நிலைகள் பற்றி தயை கூர்ந்து எங்களுக்கு விளக்குங்கள் ஸ்வாமி

ஸ்வாமியின் பதில்:
இங்கே தான் பலருக்கும் கடவுளின் உருவம் இல்லாத நிலையை எப்படி மனதில் கொண்டு வருவது அதை எவ்வாறு புரிந்து கொள்வது என்று குழப்பம் வருகின்றது.

உங்களுக்கு ஓர் உருவம் இருப்பதால் கடவுளையும் ஒரு உருவத்துடன் தானே நீங்கள் சிந்திக்க இயலும்.

உதாரணமாக ஒரு மீன் கடவுளை பற்றி சிந்தித்தால் கடவுளை தன்னை விட பெரிய மீனாகத்தானே நினைக்கும்.

இது போலவே மனிதர்கள் கடவுளை பற்றி சிந்திக்கும் போது அவரை குற்றம் குறை இல்லாத மாமனிதராக உருவக படுத்தி கொள்கிறார்கள்.

கடவுளின் உருவமற்ற நிலையை சிந்திப்பது என்பது அவருடைய உருவமுள்ள நிலையை அடிப்படையாக கொண்டே அமைகிறது.

கடவுளின் உருவமற்ற நிலைஎன்பது உருவமுள்ள நிலையிலிருந்தே பெறபடுகிறது.

இதை ஒரு உதாரணத்தின் மூலமாக புரிந்து கொள்ளலாம்.

இங்கே கொடைகானலில் நீங்கள் ஸ்வாமி முன் அமர்ந்து கொண்டு ஸ்வாமி பேசுவதை கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.பிறகு நீங்கள் ஊருக்கு சென்றதும் இங்கே கேட்டவற்றை மனதில் கொண்டு வந்து நினைத்து பார்கிறீர்கள்.அவ்வாறு செய்யவும் போது ஸ்வாமி உங்கள் உடன் இருக்கிறாரா என்ன.நீங்கள் இந்த அறையிலா இருக்கிறீர்கள்.இல்லையே. ஆனால் இந்த நேரடி அனுபவம் உங்கள் மனதில் பதிந்து விடுவதால் உங்களால் இங்கே இருப்பது போல் அதை நினைவு படுத்தி கொள்ள முடிகிறது.

நீங்கள் இங்கே பார்ப்பது சாகரமாகும்.

அங்கே நினைவு படுத்தி கொள்வது நிராகாரமாகும்.

ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை.

அதாவது கடவுளின் உருவமற்ற நிலை என்பது உருவமுள்ள நிலையை வைத்து தான் சிந்திக்க படுகிறது.

பாலை அருந்துவதற்கு டம்ப்ளர் தேவை அல்லவா.

அதை போல் கடவுளின் உருவமற்ற நிலையை சிந்திக்க உருவமுள்ள நிலையை புரிந்து கொள்வது அவசியமாகும்.

அடுத்த கேள்வி:ஸ்வாமி கடவுளை உருவமற்ற நிலையில் சிந்தித்து வழி படுவது சிறந்ததா அல்லது உருவமுடையவராக வழிபடுவது சிறந்ததா.

ஸ்வாமி யின் பதில்:
ஸ்வாமி சொல்வது என்னவென்றால் இரண்டுமே சிறந்தது தான்.
எப்படி என்றால் கோவை நகரம் சம தரையில் அமைந்துள்ளது.

ஏற்ற இறக்கம் இல்லாத சமவெளியில் உள்ளது.இயற்கையாகவே அவ்வாறு அமைந்துவிட்டது.ஆனால் கொடைகானலோ மலையின் மீது உள்ளது.மலை சரிவுகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

இரண்டு நகரங்களுமே வேறு வேறான அமைப்பை கொண்டிருந்தாலும் இரண்டுமே தனிதன்மை வாய்ந்த அழகுடன் திகழ்கின்றன.

அதை போலவே கடவுளை உருவ வழிபாடு செய்வதும் உருவமற்றவராக சிந்தித்து வழிபடுவதும் சாதகரின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவுகின்றன.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி கடவுள் எங்கும் இருக்கிறார் எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்று வேதங்கள் கூறுகின்றன.தெய்வீகத்தின் இந்த பண்பை பற்றி தயை கூர்ந்து எங்களுக்கு விளக்கி சொல்லுங்கள் ஸ்வாமி.இதனை நாங்கள் எவ்வாறு உணர்ந்து கொள்ள முடியும்.

ஸ்வாமி யின் பதில்:
பகவத்கீதை சிருஷ்டி அனைத்தும் இறைவனிடமிருந்தே தோன்றின உயிர்கள் அனைத்தும் இறைவனிடமிருந்தே பிறந்தன என்று கூறுகின்றது.

நீங்கள் ஒரு மாங்கொட்டையை பூமியில் விதைகிறீர்கள்.

சில நாட்களில் அது ஒரு மரமாக வளர்ந்து நிற்கின்றது.

அந்த மரத்தில் பழுக்கின்ற மாங்கனியில் மீண்டும் மாங்கொட்டை இருக்கிறது.

இந்த பிரபஞ்சமும் ஒரு விருஷம் போல தான்.கடவுளே அதன் வித்தாவார். அந்த வித்திலிருந்துதான் சிருஷ்டி அனைத்தும் தோன்றுகின்றன.

அடுத்த கேள்வி: ஸ்வாமி ஒரே தெய்வீகம் அனைத்திலும் நிறைந்திருக்கும் போது ஏன் வேற்றுமைகள் உண்டாகின்றன.

நாங்கள் உருவத்திலும் அறிவு திறனிலும் ஏன் வேறுபட்டு நிற்கிறோம்

ஸ்வாமி யின் பதில்:
இங்கே இறையை தவிர இரண்டாவதாக வேறு எதுவுமே இல்லை என்று வேதங்கள் கூறுகின்றன.

அப்படி இருக்கும் போது வேறுபாடுகள் ஏன் தோன்றுகின்றன.

உதாரணமாக ஒரே மின் சக்தி தான் கம்பியில் சென்று கொண்டிருக்கிறது.ஆனால் அதிக வோல்டேஜ் கொண்ட பல்பு பிரகாசமாகவும் குறைவான வோல்டேஜ் கொண்ட பல்பு மங்கலாகவும் எரிகிறது.

அதை போலவே உங்கள் அனைவரின் உடம்பாகிய பல்பில் ஒரே விதமான தெய்வீக சக்தியே நிறைந்துள்ளது.

உங்களுடைய கிரஹிக்கும் தன்மையை பொறுத்து ஒவ்வொருவரின் செயல்பாடும் வேறுபடுகிறது.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி தெய்வீகம் என்பது அனைத்திலும் உள்ளது என கூறுகின்றீர்கள் அப்படி என்றால் நாங்கள் பிறப்பதற்கு முன் அது எங்கேயிருந்தது
நாங்கள் இறந்த பின் அது எங்கே செல்கிறது.

ஸ்வாமி யின் பதில்:
தெய்வீகம் எப்போதுமே ஸாஸ்வதமாக எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்றது.அது பரிசுத்தமானது அழிவில்லாதது.

பிறப்பு இறப்பு இவைகளுக்கு அப்பாற்பட்டது.சநாதனமானது.நிரந்தரமானது.இடம் காலம் நேர பரிணாமங்களை கடந்தது.

உதாரணமாக மின்சாரம் எப்போதும் கம்பி வழியாக சென்று கொண்டுதான் இருக்கிறது.அதனுடன் பல்புக்கு தொடர்பு ஏற்படுத்தினால் தானே பல்பு எரியும்.பல்பை ஹோல்டரில் மாட்டாமல் கையில் பிடித்து கொண்டிருந்தால் அது எப்படி எரியும்.

மின்சாரம் என்பது எப்போதும் கம்பியில் இருக்கிறது.பல்பை எடுத்து விட்டாலும் கம்பியில் மின்சாரம் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

அது போலவே தெய்வீக ஆற்றல் என்பது எப்போதும் எங்கும் இருந்து கொண்டுதான் இருக்கிறது.அதுவே மனித உடலாகிய பல்பை செயல்பட செய்கிறது.

மனித உடல் இறந்து பட்டாலும் தெய்வீக ஆற்றல் அழிவில்லாமல் அப்படியே இருக்கிறது.

அடுத்த கேள்வி:ஸ்வாமி கடவுளை ஹிருதயவாசி என போற்றுகின்றோம்.இங்கே ஹிருதயம் என்பது மனித உடலின் இடது பக்கத்தில் உள்ள இதயத்தைதானே குறிக்கின்றது.

ஸ்வாமி யின் பதில்:இல்லை இல்லை நீங்கள் சொல்வது பௌதிக இதயம்

கடவுள் இருப்பதோ வலதுபுறத்தில் உள்ள ஆன்மீக இதயத்தில்.இது இரக்கம் மற்றும் தயை நிரம்பிய தாகும்.இதுவே கடவுள் குடியிருக்கும் கோவிலாகும்.

கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கடவுள் உங்கள் மனமாகிய கோயிலிலே குடியிருக்கின்றார் என கூறியுள்ளார்.

உலகியலான அறிவு என்பது தலை அதாவது மூளை சம்பந்தபட்டதாகும்.ஆனால் இரக்கம் கருணை சதயம் தியாகம் போன்ற நற்பண்புகள் ஹிருதயத்திலிருந்து வருவதாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி தெய்வீகத்தை ஆராய்ச்சிகளின் மூலமாக கண்டறிய முடியுமா.காரண காரியங்களை கொண்டு தெய்வீகத்தை அடையாளம் காண முடியுமா.

ஸ்வாமி யின் பதில்:
உலகியலான அனுபவங்கள் எல்லாம் நேரம் காலம் இடம் இவைகளுக்கு கட்டுபட்டவை.

உங்களின் புலன்கள் மூலமாக வெளியுலக அனுபவங்கள் அறியபடுகின்றன.அறிவியல் என்பது ஆராய்சிகளின் மூலமாக எலக்ட்ரானிக் உபகரணங்கள் கம்ப்யூட்டர் இவைகளை கண்டு பிடித்து மனித வாழ்க்கை க்கு சௌகரியங்களை சேர்கின்றன.

ஆனால் ஆன்மீக சாதனைகளின் மூலம் தெய்வீகத்தை உணர்வது என்பதை ஆராய்ச்சி கூடங்களில் செய்ய முடியாது.

அறிவியல் என்பது பரிசோதனைகளின் அடிப்படையில் ஆனது.

ஆன்மீகம் என்பது அனுபவத்தின் அடிப்படையில் ஆனது.அறிவியலில் நீங்கள் அனலைஸ் செய்கிறீர்கள்.

ஆன்மீகத்தில் நீங்கள் ரியலைஸ் செய்கிறீர்கள்.

நன்றி
அனில்குமார் சாயிராம் சார் தொடர்ந்து நம் ஸ்வாமி யின் மதிப்பு மிக்க உபதேசங்களை வரும் நாட்களிலே நம்முடன் பகிர்ந்து கொள்ள இருக்கிறார்.

தொடர்ந்து அனுபவிப்போம்
ஜெய் சாயிராம்